(3) ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பெறும் பொருள் விவரம் குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். உரிமைக் குழுவுக்கு அனுப்புவதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. சப்ஜக்ட் மாட்டர் ரெக்கார்டு ஆகாமல் அந்தப் பிரச்சினையை எப்படி உரிமைக் குழுவுக்கு விடுவது? அதைப் படிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மன்னிக்க வேண்டும் ஏற்கனவே சபை ஏற்றுக்கொண்ட பிறகு திரும்ப அந்தப் பிரச்சினையைக் கிளப்புவது எந்த வகையிலும் நியாயம் அல்ல. 'சிகப்பு நாடா' பத்திரிகையில் 8 ஆம் தேதி வந்திருக்கும் செய்தி அந்தச் செய்தியை மன்றத்தில் படித்து மாசு கற்பிக்க விரும்பவில்லை.

திரு. ஏ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர், இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு அனுப்புவதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் அதிலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது சபைக்குத் தெரியவேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: உரிமைக் குழுவுக்கு அனுப்பிய பிறகு தயவுசெய்து அந்த பிரச்சினையைப் பற்றி விவாதிக்க வேணடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 8 ஆம் தேதி பத்திரிகையில் வந்திருக்கிறது. உரிமைக் குழு பரிசீலித்து முடிவு சொல்லும்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

[அ] சென்னை இராயபுரம் காசிமேடு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தினால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்தும், அரசு உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் அவசியம் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த 6—8—1977 அன்று சென்னை இராயபுரம் தொகுதி காசிமேடு கடலோரப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தினால் அங்குள்ள பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது பற்றியும் அதுபற்றி அரசு உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் அவசியம் பற்றியும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள்: